5. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 13 (2)–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதி 13 (2)-ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதி 13 (2)-ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, 2011-2012 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் இன்று முன்மொழியப்பெற்று வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(இ) கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2011–2012, (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2011-2012 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*